எனவே, முரசொலி ஆசிரியர் விளக்கம் கொடுத்திருப்பது ஏற்றுக்கொள்ளும் முறையில் அமையவில்லை. ஆயினும் நான் சிறிது நேரத்திற்கு முன்பாக "மாலை முரசு" பத்திரிகைக்கு கொடுத்த தீர்ப்பில் பத்திரிகைகள் எவ்வாறு அவையின் நடவடிக்கைகளை வெளியிடவேண்டுமென்று கூறியுள்ளேன். அக்கருத்துக்கள் இந்த ஏட்டிற்கும் முற்றிலும் பொருந்தும்.

ஆறுவது சட்டமன்றத்தில் இவை எல்லாம் பற்றி ஆரம்பத்திலேயே கடுமையான நடவடிக்கை வேண்டாம் என்ற எண்ணத்தினால் இப்பத்திரிகைக்கும் அவையின் நடவடிக்கை குறிப்புகள் வெளியிடப்படுவது சுருக்கமாக இருந்தாலும், அவைகளின் மையக் கருத்துக்கள் வேறுபடாமல் வெளியிடப்படவேண்டுமென்று எச்சரித்து இப்பிரச்சனையில் மேற்கொண்டு எவ்வித நடவடிக்கையும் தேவையில்லை என்று தீர்ப்பளிக்கின்றேன்.

(9-50)

<u>திரு. எம். ஏ. லத்தீப் :</u> * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு லத்தீப் பேசியவை அத்தனையையும் நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடவேண்டும் என்று உத்திரவிடுகிறேன்.

THIRU M..A. LATHEEF : As a protest, I walk out of the House.

(திரு. எம். ஏ. லத்தீப் வெளிநடப்புச் செய்தார்]

<u>(6) அறிவிப்பு</u>

அலுவல் ஆய்வுக் குழு உறுப்பினர் நியமனம்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> 193வது விதியின்கீழ் திரு. டி. இராமசாமி அவர்களை அலுவல் ஆய்வுக்குழுவில் உறுப்பினராக நியமிக்கிறேன்.

---

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க முற்பகல் 9-50—9-56-இல் சில பகுதிகள் அகற்றப்பெற்றன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS